வாடகை என்றுல் எப்படி வசூலிப்பது, எப்படி நிர்வகிப்பது என்று எனக்குப் புரியவில்லை. ஆகவே, அந்த வகையிலே நடவடிக்கைகளை மேற்கொள்வது அரசுக்கு இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* 350 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?—

(அ) சென்னை நகரில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் காவல் துறையினருக்கு தவணைத் திட்டத்தின்கீழ் குடியிருப்புகள் வழங்கிடும் செயற்குறிப்பு உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) (இ) தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத் தலைவர் காவல் துறையினருக்கு குடிசைப் பகுதி மாற்றுத் திட்டத்தின்கீழ் கட்டப்படும் குடியிருப்புகளை தவணைத் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யலாம் என பரிந்துரை செய்தார். அரசு அச்செயற்குறிப்பை ஆய்ந்து, அதனை ஏற்றுக்கொள்ள இயலவில்லை என்று வாரியத் தலைவருக்கு தெரிவித்துள்ளது.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, இந்தத் திட்டம் மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அப்படிப்பட்ட எண்ணம் தற்பொழுது அரசினிடத்தில் இல்லை.

திரு. தி. பொன்னுமலை: தலைவரவர்களே, சென்னை நகரத்திலே இருப்பதைப்போல கிராமப்புறங்களிலேயும் இந்தத் திட்டம் அமல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, கிராமப்புறங்களுக்குத் தனியான வீட்டு வசதித் திட்டம் இருக்கிறது. குடிசை மாற்று வாரியம் போன்ற திட்டங்கள் தேவையில்லை. நான் ஏற்கனவே இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். 4,000 ரூபாய் வரையிலே அரசு கடன் தருகிறது. 3 செண்ட், 5 செண்ட் நிலம் வைத்திருந்தால் கடன் பெற்று சொந்தத்திலே வீடு கட்டிக் கொள்வதுதான் அவர்களுக்கும் ஏற்றதாக இருக்கும், அரசுக்கும் நல்லதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Strike in Sathya Studios.

* 351 *Q.*—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether it is a fact that the workers of Sathya Studios, Madras were on strike during August 1974 ; and

(*b*) if so, the steps taken by the Government to settle the issue ?